FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

UNDER SECTION 173 BNSS

~~(Under Section 154 Cr.P.C)~~

~~(குற்றவியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 154 இன் கீழ்)~~

C 8129836

1. District : மாவட்டம் Madurai PS: காவல்நிலையம் VQAC Year: ஆண்டு 2025 FIR No.: மு.த.அ. எண் 12/25 Date: நாள் 22.07.25

2. (i) Act சட்டம்: Pc Act 1988 as amended Sections பிரிவுகள்: 7(a) of Pc Act 1988
(ii) Act சட்டம்: by the Pc Camendment) Sections பிரிவுகள்: as amended by the
(iii) Act சட்டம்: Act 2018. Sections பிரிவுகள்: Pc Camendment) Act 2018.
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : நாள் வரை 22.07.25 at about 10.00 hrs
Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 22.07.2025 Time : நேரம் 18.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 22.07.2025 Time : நேரம் 18.45 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Typed complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Near Kumar mess, Thallakulam Madurai around 1.5 km South
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி —

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : — District : மாவட்டம்
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் K. Anbuchelvam (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Kandhasamy
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 08.06.1974 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
(f) Occupation : தொழில் Advocate (g) Address : முகவரி 2/14 E, Visha illam Sri Ram Nagar, Uthankudi, Madurai

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
Tr. Balakrishnanan, Thasildar, Usilampatti Taluk, Madurai.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

—

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

—

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seperate Sheets attached

Pages 3 to 8

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

22.7.25.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 22.07.2025 19.35 hrs
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் T. Suriyakala
Rank: நிலை Inspector of Police
No. எண் VQAC, Madurai
(22.07.2025)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது,

இன்று 22.07.2025-ஆம் தேதி மாலை சுமார் 18.00 மணிக்கு மதுரை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் நான் அலுவலில் இருந்த போது, மதுரை உத்தங்குடி ஸ்ரீராம் நகர், 2/14E, விஷா இல்லத்தில் குடியிருந்து வரும் R. கந்தசாமி மகன் திரு. K.அன்புசெல்வம் என்பவர் நிலையம் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்யப்பட்ட புகார் மனுவை கொடுத்தார். அதன் விபரம் பின்வருமாறு: அனுப்புனர்:- K.அன்புசெல்வம், த.பெ.R.கந்தசாமி, 2/14E, விஷா இல்லம், ஸ்ரீராம் நகர், உத்தங்குடி, மதுரை. பெறுநர் :- காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, மதுரை.அய்யா, நான் உத்தங்குடியில் எனது குடும்பத்துடன் வசித்து வருகிறேன். நான் மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்கறிஞராக உள்ளேன். கதவு எண். 197, 1வது தெரு, நால்வர் தெரு, கோயம்புத்தூர் - 46 என்ற முகவரியில் குடியிருந்து வரும் திரு. அசோக், த/பெ. கந்தசாமி என்பவர் எனது குடும்ப நண்பராவார். அவருக்கு உசிலம்பட்டி பூர்வீகம் ஆகும். ஆனால் அவர் தற்போது கோயம்புத்தூரில் சொந்த தொழில் செய்து வருகிறார். மதுரை மாவட்டம் உசிலம்பட்டி டவுன், வார்டு-1, சீமானுத்து நகர புல எண். 18/9A1A, பழைய சர்வே எண்.323/4A1, பட்டா எண். 1787-ன் படி திரு.அசோக் அவர்களுடைய தந்தை கந்தசாமி மற்றும் அவருடன் பிறந்தவர்கள் சேர்ந்து கடந்த 1992-ஆம் ஆண்டு பாகபிரிவினை செய்து உசிலம்பட்டி சார்-பதிவாளர் ஆவண எண். 1737/1992-ன் படி அசோக் அவர்களின் தந்தையான கந்தசாமிக்கு பதிவு செய்து கிடைக்க பெற்ற 61 சென்ட் சொத்தாகும். அந்த சொத்தில் பல பிளாட்டுகளாக பிரிக்கப்பட்டு விற்றது போக மீதமுள்ள 6 பிளாட்கள் மொத்தம் 24 செண்ட் அசோக் அவர்களின் தந்தை கந்தசாமி அவர்கள் கடந்த 29.11.2004-ஆம் ஆண்டு இறந்த பின்னர் அவரது வாரிசுதாரான எனது நண்பர் அசோக் அவர்களும், அவரின் தாய் திருமதி. வர்த்தினி அவர்களும் அந்த சொத்தை அனுபவித்து வருகிறார்கள். அந்த 24 செண்டில் உள்ள 6 வீட்டடி மனைகளுக்கும் DTCP Approval பெறுவதற்கு கடந்த 20.08.2024-ஆம் தேதியன்று எனது நண்பர் அசோக் ஆன்லைனில் தனித்தனியாக மதுரை DTCP-அலுவலகத்திற்கு விண்ணப்பித்தார். DTCP Approval பெறுவதற்கு முன்பு வருவாய்த்துறை, வனத்துறை, புவியியல் மற்றும் சுரங்கத்துறை ஆகிய மூன்று துறைகளிலிருந்து தடையில்லா சான்று பெறவேண்டும் என விசாரித்தபோது தெரியவந்தது. அதனால் அவர் மூன்று துறைகளிலிருந்து தடையில்லா சான்று பெற விண்ணப்பித்திருந்தார். எனது நண்பர் கோயம்புத்தூரில் இருந்து மதுரை வந்து அலைய

முடியாத காரணத்தால், அவர் என்னிடம் இது தொடர்பாக விபரங்களை தெரிவித்து தடையில்லா சான்று பெற என்னை சம்பந்தப்பட்ட அலுவலகங்களில் தொடர்பு கொண்டு சான்று விரைவில் கிடைக்க ஏற்பாடு செய்து தருமாறு கூறியிருந்தார். அதன் படி நான் வனத்துறை, புவியியல் மற்றும் சுரங்கத்துறை ஆகிய இரண்டு துறைகளில் தடையில்லா சான்றுகளை பெற்றோம். மேலும் திரு. அசோக் அவர்கள் வருவாய்த்துறையில் சான்று பெற உசிலம்பட்டி வருவாய் கோட்டாட்சியர் அவர்களுக்கு கடந்த 25.01.2025-ஆம் தேதியன்று தபால் மூலம் விண்ணப்பித்திருந்தார். அந்த விண்ணப்பம் விசாரணைக்காக உசிலம்பட்டி வட்டாட்சியர் அவர்களுக்கு அனுப்பப்பட்டதாக கோட்டாட்சியர் அலுவலகம் மூலம் தகவல் தெரிந்து கொண்டேன். பின்னர் நான் உசிலம்பட்டி வட்டாட்சியர் அலுவலகத்தை தொடர்பு கொண்ட போது, எங்கள் விண்ணப்பத்தை உசிலம்பட்டி நகர் சர்வேயர் திரு. ஜெயராமன் அவர்களின் அறிக்கை பெற அனுப்பப்பட்டு, பின்பு திரு. ஜெயராமன் அவர்கள் எனது நண்பரின் இடத்தை பார்வையிட்டு, வட்டாட்சியர் அவர்களுக்கு அறிக்கை அனுப்பி விட்டதாகவும், தற்போது உசிலம்பட்டி வட்டாட்சியர் திரு.பாலகிருஷ்ணன் அவர்கள் நிலுவையில் வைத்துள்ளதாகவும் தெரியவந்தது. இந்த கோப்பு சம்பந்தமாக நான் உசிலம்பட்டி வட்டாட்சியர் திரு. பாலகிருஷ்ணன் அவர்களை கடந்த 15.07.2025-ஆம் தேதியன்று என்னுடைய மொபைல் 9842103070 என்ற எண்ணிலிருந்து உசிலம்பட்டி வட்டாட்சியர் மொபைல் எண்ணான 8526111783-ல் தொடர்பு கொண்டு, என்னை அறிமுகம் செய்து கொண்டு, எனது நண்பர் அசோக் அவர்களின் NOC குறித்து கேட்டபோது அவர் அலுவலகத்தில் உள்ள கோப்பை பார்த்துவிட்டு சொல்வதாக கூறி என்னை 17.07.2025-ஆம் தேதி காலையில் செல்போனில் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொண்டார். அதன்படி கடந்த 17.07.2025-ஆம் தேதியன்று காலை சுமார் 9 ½ மணிக்கு செல்போனில் தொடர்பு கொண்டு, எனது நண்பர் அசோக் அவர்களின் தடையில்லா சான்று சம்பந்தமான கோப்பை பார்த்து விட்டீர்களா என்று கேட்டேன். அதற்கு அவர் என்னிடம், நான் உங்களை நேரில் சந்திக்க வேண்டும், அதனால் உடனே என்னை மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு வந்து பாருங்கள் என்று கூறினார். அதன்படி நான் மதுரை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திற்கு அன்று சுமார் 10 மணிக்கு சென்று வட்டாட்சியர் திரு. பாலகிருஷ்ணன் அவர்களது செல்போனில் வழக்கம்போல் எனது செல்போன் மூலமாக தொடர்பு கொண்டபோது, அவர் தான் மீட்டிங்-ல் இருப்பதாக தெரிவித்து, நாளை மாலையில் தன்னை தொடர்பு கொள்ளும்படி கூறினார். பிறகு அதன்படி 18.07.2025-ஆம் தேதியன்று

மாலை சுமார் 4 மணிக்கு உசிலம்பட்டி வட்டாட்சியர் அவர்களை தொடர்பு கொண்டு, வட்டாட்சியரை நேரில் சந்திக்க வரலாமா என்று கேட்டேன். அதற்கு அவர், வெளி வேலையாக இருப்பதால், திங்கள் கிழமை காலையில் அவரை தொடர்பு கொண்டு பேசிவிட்டு வருமாறு கூறினார். அதன்படி நான் நேற்று (21.07.2025) காலை சுமார் 9 ¼ மணிக்கு வட்டாட்சியர் திரு. பாலகிருஷ்ணன் அவர்களை வழக்கம்போல் செல்போனில் தொடர்பு கொண்டபோது அவர் தான் உசிலம்பட்டிக்கு சென்று விட்டதாகவும், தான் மாலை மதுரைக்கு வரும்போது பார்க்கலாம் எனக் கூறி, தன்னை மாலையில் செல்போனில் தொடர்பு கொள்ளும்படி கூறினார். அதன்பேரில் நேற்று இரவு சுமார் 7 ½ மணிக்கு வட்டாட்சியர் திரு. பாலகிருஷ்ணன் அவர்களை அவரது செல்போனில் தொடர்பு கொண்டபோது, அவர் தான் இன்னும் உசிலம்பட்டியில் இருப்பதாகவும், வேலை முடிய லேட் ஆகிவிடும், அதனால் நாளைக்கு காலையில் செல்போனில் தொடர்பு கொள்ளுமாறு கூறினார். அதன் பிரகாரம் இன்று (22.07.2025) காலை சுமார் 9 மணிக்கு வட்டாட்சியர் திரு. பாலகிருஷ்ணன் அவர்களை வழக்கம் செல்போனில் தொடர்பு கொண்டபோது, அவர் தான் வீட்டில் புறப்பட்டுக் கொண்டிருப்பதாகவும், தான் தல்லாகுளத்தில் உள்ள விசாலம் காபி பார் அருகில் 9 ¾ மணிக்கு வந்து விடுவதாகவும், அங்கு வந்து என்னை செல்போனில் தொடர்பு கொள்ளுங்கள் என தெரிவித்தார். அதன்படி நான் 9 ¾ மணிக்கு விசாலம் காபி பார் அருகே சென்று வட்டாட்சியர் திரு. பாலகிருஷ்ணன் அவர்களின் வழக்கம்போல் செல்போனில் தொடர்பு கொண்டபோது, திரு.பாலகிருஷ்ணன் அவர்கள் இன்னும் பத்து நிமிடத்தில் நான் அங்கு வந்து விடுகிறேன், அங்கேயே என்னை காத்திருக்குமாறும் கூறினார். பின்னர் சுமார் 10 மணிக்கு உசிலம்பட்டி வட்டாட்சியர் திரு.பாலகிருஷ்ணன் அவர்கள் அரசு வாகனமான போலிரோ-வில் வந்து, விசாலம் காபி பார்க்கு அருகே உள்ள குமார் மெஸ் அருகே வாகனத்தை நிறுத்தினார். நான் அந்த வாகனத்தின் அருகே சென்று வட்டாட்சியர் திரு.பாலகிருஷ்ணன் அவர்களை பார்த்து, நான் என்னை அறிமுகப்படுத்தி கொண்டு, எனது நண்பர் அசோக் அவர்களின் இடத்திற்கான தடையில்லா சான்று பற்றி கேட்டேன். அதற்கு அவர் எனது நண்பர் அசோக் எங்கே என்று கேட்டார். அதற்கு நான், நண்பர் அசோக் கோயம்புத்தூரில் பிசினஸ் செய்து வருகிறார். அவரால் மதுரைக்கு அடிக்கடி வரமுடியாது. அதனால் இந்த தடையில்லா சான்று பெறுவது சம்பந்தமாக என்னை பார்த்துக் கொள்ளச் சொன்னார் என்று தெரிவித்தேன். அதற்கு அவர், நான் உங்களது நண்பரின் தடையில்லா சான்று கோப்பை பார்த்து விட்டேன்.

ஆனால் கொஞ்சம் செலவாகும் என்று கூறினார். அதற்கு நான் இது சம்பந்தமாக அரசுக்கு கட்டணம் ஏதும் செலுத்த வேண்டுமா என்று கேட்டேன். அதற்கு அவர், பொதுவாக நான் தடையில்லா சான்று அளிப்பதற்கு, என்னுடைய செலவிற்கு ஒரு ஏக்கருக்கு ஒரு இலட்சம் வாங்குவது வழக்கம். உங்கள் நண்பருடைய இடம் 24 செண்ட் என்பதால், நீங்கள் எனக்கு ரூ.25,000/- கொடுங்கள் என்று கேட்டார். அதற்கு நான், இந்த தடையில்லா சான்றுக்காவே கடந்த மூன்று மாதங்களாக அலைந்து கொண்டு தான் இருக்கிறேன். அதனால் பணத்தை கொஞ்சம் குறைத்துக் கொள்ளுங்கள் என்று கேட்டேன். அதற்கு வட்டாட்சியர் திரு. பாலகிருஷ்ணன் அவர்கள் என்னிடம், சரி உங்களுக்காக நான் ரூ.15,000/- குறைத்து கொள்கிறேன், நீங்கள் இன்று போல் செல்போனில் நாளைக்கு காலையில் என்னிடம் பேசிவிட்டு, நான் கேட்ட ரூ.10,000/-த்தை கொண்டு வந்து கொடுங்கள், அப்போது தான் நான் சீக்கிரமே உங்கள் நண்பரின் இடத்திற்கு தடையில்லா சான்று கிடைக்க எனது அறிக்கையில் சிபாரிசு செய்து உசிலம்பட்டி கோட்டாட்சியர் அவர்களுக்கு அனுப்பி வைப்பேன், இல்லாவிட்டால் தடையில்லா சான்று கிடைக்க நீங்கள் அலைந்து கொண்டே தான் இருக்க வேண்டும் என்று என்னிடம் கூறிவிட்டு சென்று விட்டார். பின்பு நான் எனது நண்பர் அசோக் அவர்களை போனில் தொடர்பு கொண்டு நடந்த விபரத்தை தெரிவித்து, வட்டாட்சியர் அவர்கள் தடையில்லா சான்று கிடைக்க ஏற்பாடு செய்வதற்கு ரூ.10,000/- லஞ்சம் கேட்டதை கூறினேன். அதற்கு அசோக் அவர்கள் நாம் ஜனவரி மாதம் கொடுத்த விண்ணப்பத்திற்கு இன்று வரை எந்தஒரு நடவடிக்கையும் எடுக்காமல் அலைய விடுகிறார்கள், மேலும் ரூ.10,000/- வேற லஞ்சம் கேட்கிறார்கள் எனக் கூறி வருத்தப்பட்டு, அவர் என்னிடம் தன்னுடைய இடத்திற்கு தடையில்லா சான்று பெறுவதற்கு உசிலம்பட்டி வட்டாட்சியர் திரு.பாலகிருஷ்ணன் அவர்களுக்கு ரூ.10,000/- லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை என தெரிவித்து, அவர் என்னிடம், நான் ரூ.10,000/-த்தை உங்களின் வங்கி கணக்கிற்கு அனுப்பி வைக்கிறேன், இது சம்பந்தமான நீங்கள் மதுரை லஞ்ச ஒழிப்புத் துறையில் புகார் கொடுங்கள் எனக் கூறினார். அதன்படி எனது நண்பர் திரு.அசோக் அவர்கள் ரூ.10,000/- எனது வங்கி கணக்கிற்கு அனுப்பி வைத்தார். திரு. அசோக் அவர்கள் கூறியபடி அவரது இடத்திற்கு தடையில்லா சான்று வழங்க சிபாரிசு செய்து, தனது அறிக்கையை கோட்டாட்சியர் அவர்களுக்கு அனுப்பி வைக்க ரூ.10,000/- லஞ்சம் கேட்கும் உசிலம்பட்டி வட்டாட்சியர் திரு.பாலகிருஷ்ணன் மீது நடவடிக்கை எடுக்க இந்த புகார் மனுவை அளிக்கின்றேன். மேலும் 1. எனது நண்பர் அசோக் அவர்கள் ஏற்கனவே

எனக்கு அளித்த அங்கீகார கடிதம், 2. உசிலம்பட்டி சார்பதிவாளர் ஆவண எண். 1737/1992, 3.TSLR பட்டா எண். 1787, 4. திரு.அசோக் அவர்களின் தந்தை கந்தசாமி அவர்களின் இறப்பு சான்றிதழ், 5. கந்தசாமியின் வாரிசு சான்றிதழ், 6. திரு.அசோக் அவர்களின் ஆதார் அட்டை, 7. 20.08.2024 தேதியிட்ட DTCP-யில் 6 பிளாட்களுக்கு தடையில்லா சான்று பெற விண்ணப்பித்தற்கான ஒப்புகை இரசீதுகள்-6, 8. துணை இயக்குநர், புவியியல் மற்றும் சுரங்கத்துறை, மதுரை அவர்கள், துணை இயக்குநர் நகர் மற்றும் ஊரமைப்புத்துறை, மதுரை அவர்களுக்கு அளித்த தடையில்லா சான்று எண். RC.No. 688/Mines/2024-10, நாள்: 13.01.2025, 9.தலைமை வனத்துறை, சென்னை அவர்கள், துணை இயக்குநர் நகர் மற்றும் ஊரமைப்புத்துறை, மதுரை அவர்களுக்கு அளித்த தடையில்லா சான்று எண். K.Dis No.HOTNFD/769/2025, நாள்: 27.03.2025 ஆகியவற்றின் நகல்களை இத்துடன் இணைத்துள்ளேன். மேலும், உசிலம்பட்டி வட்டாட்சியர் திரு.பாலகிருஷ்ணன் அவர்கள் கேட்டபடி ரூ.10,000/-த்தை லஞ்சமாக கொடுத்து, நடவடிக்கை எடுக்க, எனது நண்பர் எனக்கு அனுப்பி வைத்த ரூ.10,000/-த்தை எனது வங்கி கணக்கிலிருந்து எடுத்து கொண்டு வந்துள்ளேன், தக்க நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு (ஒ-ம்) **XXXXXX K. Anbuchelvam**), 22.7.25.

Sir, Received the typed complaint today on (22.07.2025) at 18.00 hrs, the genuineness of the complainant was verified through sources and found to be genuine. The integrity and antecedents of the accused was also verified through sources and found to be bad. I have obtained permission from the Superintendent of Police, Southern Range, Directorate of Vigilance and Anti-Corruption, Chennai and registered a case in Madurai V&AC Cr. No. 12/2025, u/s. 7 (a) of PC Act 1988 as amended by Prevention of Corruption (Amendment) Act 2018 at 18.45 hrs and took up investigation. Sd./-XXXXXX (T. SURIYAKALA) 22.7.2025, Inspector of Police, V&AC, Madurai.

Original FIR along with original typed complaint of Tr.K.Anbuchelvam, S/o.Kandhasamy, No. 2/14-E, Visha Illam, Sriram Nagar, Uthangudi, Madurai along with photo copies of 1. Authorization Letter to Tr. Anbuchelvam from

Tr.K.Ashok, 2. Partition deed No. 1737/1992 of Sub-Registrar, Usilampatti, 3. TSLR Patta No.1787, 4. Death Certificate of Kandasamy, 5. Legal heir Certificate of Kandasamy, 6. Aadhaar Card of Tr. Ashok, 7. Six No's of Acknowledgment Slips of Town and Country Planning, 8. No Objection Certificate in RC.No. 688/Mines/2024-10, of the Deputy Director of Geology and Mining, Madurai, dated: 13.01.2025 and 9. No Objection Certificate in RC.No. 688/Mines/2024-10, of the Deputy Director of Geology and Mining, Madurai, dated: 13.01.2025 are herewith enclosed and submitted to the Hon'ble Principal District Judge, District Court, Madurai and copy of F.I.R. is submitted to the Director of Vigilance & Anti-Corruption, Chennai.

22.7.25

(P. Suriyakala)
Inspector of Police,
VAC, Madurai

INSPECTOR OF POLICE
Vigilance Antl Corruption
MADURAI